# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2277/04 - 2022 අප්‍රේල් මස 25 වැනි සඳුදා - 2022.04.25

*2277/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/2012* (V).

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின்கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2022, ஏப்பிறல் 22.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் நீல நீந்தும் நண்டுகள் கடற்றொழில் முகாமை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளொருவர், 1996, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 948/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கிணங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தொழிற்பாட்டு உரிமமொன்றின்கீழ் தவிர கடலடியில் விரிக்கும் கெவுள் வலைகள் அல்லது பொறிகளைப் பயன்படுத்தி இலங்கை நீர்ப்பரப்புகளில் நீல நீந்தும் நண்டுகள் பிடிப்பதில் ஈடுபடுதலாகாது.

3. ஆளொருவர், நீல நீந்தும் நண்டுகள் பிடித்தல் தொழிற்பாடுகளுக்காக நைலோன் பொலிபில மென்ட் தவிர்ந்த ஏதேனும் வலையைப் பயன்படுத்துதலாகாது.

4. ஆளொருவர், நீல நீந்தும் நண்டுகள் பிடித்தல் தொழிற்பாடுகளுக்காக நான்கு தசம் ஐந்து (4.5) அங்குலங்களுக்குக் குறைந்த வலைக் கண் அளவு கொண்ட அல்லது ஆறுக்கு (6) மேற்பட்ட இழை கொண்ட கடலடியில் விரிக்கும் செவுள் வலைகளைப் பயன்படுத்துதலாகாது.

5. ஆளொருவர், 100 கிராம் கூறு ஈர எடைக்குக் குறைவான எடையுள்ள உயிருள்ள அல்லது இறந்த நீல நீந்தும் நண்டுகளை பதனிடுதலோ அல்லது ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

6. பணிப்பாளர் தலைமையதிபதி, தேவைப்பாட்டின்மீது அல்லது ஒவ்வொரு மூன்றாண்டு காலப்பகுதிக்கு ஒரு முறை தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் விதப்புரைகளுக்கிணங்க நண்டு பிடித்தலுக்காக வருடாந்தம் வழங்கப்படும் உரிமங்களின் எண்ணிக்கை மற்றும் தொழிற்பாட்டு அளவுக்குறிப்பீடுகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

7. அமைச்சர், தேவைப்பாட்டுக்கிணங்க அல்லது ஒவ்வொரு மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு ஒரு முறை, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் விதப்புரையின்மீது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழ் அவரினால் செய்யப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளில் நண்டு பிடிப்பதற்கான மூடிய பருவகாலங்கள் மற்றும் திறந்த பருவகாலங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.

8. ஆளொருவர், நீல நீந்தும் நண்டுகள் பிடித்தல் தொழிற்பாடுகளுக்காக வெளியிணை இயந்திரம் பொருத்திய கண்ணாடியிழை வலுவூட்டிய பிளாத்திக்கு வள்ளம் (OFRP) அல்லது பொறிமயமாக்கப்பட்ட அல்லது பொறிமயமாக்கப்படாத பாரம்பரிய வள்ளங்கள் (MTRB அல்லது NTRB) தவிர்ந்த வேறு ஏதேனும் வகையினதான கலனைப் பயன்படுத்துதலாகாது.

9. ஆளொருவர், நீல நீந்தும் நண்டுகளுக்கான மீன்பிடித் தொழிற்பாடுகளை நடாத்துவதில் கடலடியை தூர்வாருதலோ அல்லது சேதமாக்குதலோ ஆகாது.

10. நீல நீந்தும் நண்டுகள் பிடித்தல் தொழிற்பாடுகளுக்காக உரிமமளிக்கப்பட்டவரொருவர் உற்பத்தித் தரவையும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு மீன்பிடித் தொழிற்பாடுகள் தொடர்பான வேறு ஏதேனும் தரவையும் வழங்குதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் -

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"பதனிடுதல்" என்பது, விற்பனை செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காக உயிருள்ள அல்லது இறந்த நண்டுகளை அவித்தல், அவற்றின் ஓடுகளை அகற்றுதல், குடல்கள் மற்றும் செவுள்களை அகற்றுதல், மாமிசத்தை துண்டுகளாக்குதல் அல்லது அதனை அகற்றுதல் எனப் பொருள்படும்.

EOG 04 - 0163

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.